திரு அருணகிரிநாதர் அருளிய கந்தர் அநுபூதி

பொருள் - எளிய தமிழ் கவிதை வடிவில்

பொருள் தமிழ் கவியாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

Youtube : https://youtube.com/c/psdprasadmusic

| | | |
|---|---|---|
| காப்பு | நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருகத்<br>தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்<br>செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே<br>பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம். | நெஞ்சம் கல்லெனினும்<br>கரைக்கின்ற செந்தமிழில்<br>"தஞ்சம் " என்பார்க்கு<br>அருளாகும் சீராளன்<br>கந்தன் புகழ்போற்றும்<br>கவிமாலை புனைகின்றேன் !<br>எந்தன் பா சிறக்க<br>கணபதியே ! அருளிடுவாய்! |
| 1 | ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்<br>பாடும் பணியே பணியா அருள்வாய்<br>தேடும் கயமா முகனைச் செருவில்<br>சாடும் தனி யானைச் சகோதரனே. | தேடிவந்து தேவர்களை<br>தாக்கவந்த அசுரனையே<br>மோதிவென்ற மோதகனின்<br>சோதரனே ! கேட்டருள்வாய் !<br>ஆடிவரும் மாமயிலை<br>கூர்வேலை, சேவலையும்<br>பாடிவரும் பணியினையே<br>பணித்திடுவாய் எனக்கேதான் ! |



PSDPRASAD

| | | |
|---|---|---|
| 2 | உல்லாச, நிராகுல, யோக இதச்<br>சல்லாப, விநோதனும் நீ அலையோ?<br>எல்லாம் அற, என்னை இழந்த நலம்<br>சொல்லாய், முருகா சுரபூ பதியே. | கலையாத இன்பமிகும்<br>யோகநிலை அதிலிருந்தும்<br>விளையாடல் செய்துவரம்<br>தருபவனும் நீயன்றோ?<br>"யான்"என்னும் ஆணவத்தை<br>அழிந்துன்னைச் சேர்கின்ற<br>ஆனந்த நிலைதன்னை<br>நீயெடுத்துச் சொல்வாயோ? |
| 3 | வானோ? புனல் பார் கனல் மாருதமோ?<br>ஞானோ தயமோ? நவில் நான் மறையோ?<br>யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்<br>தானோ? பொருளாவது சண்முகனே. | "பரம்பொருளா"ம் என்பதெது?<br>புவியிதுவோ? தண்ணீரோ?<br>பரந்திருக்கும் வானதுவோ?<br>பெருங்காற்றோ? அக்கினியோ?<br>நான்மறையோ? மனமதுவோ?<br>ஞானம்அதன் பிறப்பிடமோ?<br>நானதுவோ? எனைஆண்ட<br>சண்முகனே ! நீதானே ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 4 | வளைபட்ட கைம் மாதொடு, மக்கள் எனும்<br>தளைபட்டு அழியத் தகுமோ? தகுமோ?<br>கிளைபட்டு எழு சூர் உரமும், கிரியும்,<br>தொளைபட்டு உருவத் தொடு வேலவனே. | சுற்றமெலாம் சூழவந்த<br>சூரனாவன் மார்பினையும்<br>மற்றவரில் ஒளிந்திருந்த<br>மலையினையும் துளைத்தவனே !<br>வளையணிந்த மனைவியுடன்<br>மக்களெனும் வாழ்வியலில்<br>திளைத்தபடி நானிருக்க<br>நீவைத்தால் அதுமுறையோ? |
| 5 | மக மாயை களைந்திட வல்ல பிரான்<br>முகம் ஆறும் மொழிந் தொழிந்திலனே<br>அகம் மாடை, மடந்தையர் என்(று) அயரும்<br>சகமாயையுள் நின்று தயங்குவதே. | மாயையெலாம் விலக்குகின்ற<br>முருகபிரான் நீயெமக்கு<br>வாய்மொழிந்த தத்துவங்கள்<br>வழிகாட்டும் போதிலும்நான்<br>வீடுமனை, செல்வமுடன்<br>பெண்டியரின் நினைவென்னும்<br>பீடுதரும் மாயையதில்<br>உழலுகிறேன் ! ஏனறியேன் ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 6 | திணியான மனோ சிலை மீது, உனதாள்<br>அணியார், அரவிந்தம் அரும்பு மதோ?<br>.. பணியா? .. என, வள்ளி பதம் பணியும்<br>தணியா அதிமோக தயா பரனே. | "ஆணையிடு வள்ளிதேவி !<br>ஆற்றிடுவேன் !" எனபணிந்து<br>சேவையினைக் காதலுடன்<br>செய்திருக்கும் குருபரனே !<br>பாறைபோன்ற கடினமான<br>என்மனதில் உன்னடிகள்<br>பூவைபோல பூத்ததென்ன ?<br>புரியவில்லை அற்புதமே ! |
| 7 | கெடுவாய் மனனே, கதி கேள், கரவாது<br>இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்<br>சுடுவாய் நெடு வேதனை தூள்படவே<br>விடுவாய் விடுவாய் வினை யாவையுமே. | கேடுவழி செல்கின்ற<br>மனமேநீ நல்வழிகேள் !<br>ஈடில்லா வேலவனின்<br>இறையடியை நினைப்பாயே !<br>இரப்பவர்க்கு ஒளித்திடாது<br>ஈகையினை செய்வாயே !<br>பிறவிப்பிணி எரித்திடுவாய் !<br>வினைகளெலாம் விட்டிடுவாய் ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 8 | அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும் இப்<br>பிமரம் கெட மெய்ப் பொருள் பேசியவா<br>குமரன் கிரிராச குமாரி மகன்<br>சமரம் பெரு தானவ நாசகனே. | "நான்பிறந்த ஊரெனது<br>உறவினர்கள்" எனும்மாயை<br>வீணறத்து மெய்ப்பொருளை<br>உபதேசம் செய்தவனே !<br>மலையரசன் திருமகளாம்<br>பார்வதியின் திருமகனே !<br>தலையெடுத்து அசுரர்களை<br>போரினிலே அழித்தவனே ! |
| 9 | மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்<br>பட்டு, ஊசல்படும் பரிசு என்று ஒழிவேன்?<br>தட்டு ஊடு அற வேல் சயிலத்து எறியும்<br>நிட்டூர நிராகுல, நிர்பயனே. | வேலெறிந்து மலையதனை<br>ஊடுருவி அழித்தவனே !<br>தேன்சொரியும் பூவணியும்<br>கூந்தல்கொண்ட மங்கையரின்<br>மோகமெனும் வலைவிடுத்து<br>மீள்வேன்நான் எப்போதோ?<br>சோகமிலா சுந்தரனே !<br>அச்சமிலா அறுமுகனே ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 10 | கார் மா மிசை காலன் வரில், கலபத்<br>தேர்மா மிசை வந்து, எதிரப் படுவாய்<br>தார் மார்ப, வலாரி தலாரி எனும்<br>சூர்மா மடியத் தொடுவே லவனே. | மார்பினிலே மாலையினை<br>தரித்தவனே ! சூரனெனும்<br>மாமரத்தை, வலனையுமே<br>வேலெடுத்த அழித்தவனே !<br>கார்நிறத்து எருமையிலே<br>காலன்வரும் போதினிலே<br>நீரெமக்கு எதிரினிலே<br>மயிலிலேறி அருளிடுவாய் ! |
| 11 | கூகா என என் கிளை கூடி அழப்<br>போகா வகை, மெய்ப்பொருள் பேசியவா<br>நாகாசல வேலவ நாலு கவித்<br>தியாகா சுரலோக சிகாமணியே. | நாற்கவியும் தந்தவனே !<br>தேவர்குல ரத்தினமே!<br>பார்போற்றும் செங்கோட்டு<br>வேலவனே ! சுற்றமெலாம்<br>"ஓ" எனஓலமிட்டு<br>அழுதிடநான் இறந்திடாமல்<br>ஆகாநீ ! மெய்ப்பொருளை<br>உபதேசம் செய்ததென்ன? |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 12 | செம்மான் மகளைத் திருடும் திருடன்<br>பெம்மான் முருகன், பிறவான், இறவான்<br>.. சும்மா இரு, சொல் அற .. என்றலுமே<br>அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே. | பெண்மானாம் வள்ளிமனம்<br>திருடிவந்த பெருமானே !<br>எந்நாளும் இறப்பிலாத<br>பிறப்புமிலா கோமானே !<br>மெய்ஞ்ஞான மோனநிலை<br>கொண்டிருப்பாய் என்றாயே !<br>அன்றுமுதல் உன்நினைவே<br>என்னுலகாய்க் கொண்டேனே ! |
| 13 | முருகன், தனிவேல் முனி, நம் குரு .. என்று<br>அருள் கொண்டு அறியார் அறியும் தரமோ<br>உரு அன்று, அரு அன்று, உளது அன்று, இலது அன்று,<br>இருள் அன்று, ஒளி அன்று என நின்றதுவே. | உருவுமிலா, அருவுமிலா<br>இருளுமிலா, ஒளியுமிலா<br>இருப்பதிலா, இலாதுமிலா<br>பரம்பொருளாய் இருக்கிறாய் !<br>குருவுமாகி, வேலைஏந்தும்<br>முனியுமான முருகனே !<br>பரம்பொருளாய் உணர்ந்திடஉன்<br>திருவருளே போதுமே ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 14 | கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று<br>உய்வாய், மனனே, ஒழிவாய் ஒழிவாய்<br>மெய் வாய் விழி நாசியொடும் செவி ஆம்<br>ஐவாய் வழி செல்லும் அவாவினையே. | புலனைந்தின் வழியாக<br>வெளியாகும் ஆசைகளால்<br>நலனில்லை அவைதன்னை<br>அழித்திடுவாய் என்மனமே !<br>கையோடு ஒளிவீசும்<br>வேல்கொண்ட திருமுருகன்<br>மெய்யான கழல்பற்றி<br>உய்வாயே உலகினிலே ! |
| 15 | முருகன், குமரன், குகன், என்று மொழிந்து<br>உருகும் செயல் தந்து, உணர்வு என்று அருள்வாய்<br>பொரு புங்கவரும், புவியும் பரவும்<br>குருபுங்கவ, எண் குண பஞ்சரனே. | போர்விரும்பும் தேவர்களும்<br>பூவுலகும் புகழ்கின்ற<br>பேராசான் ஆனவனே !<br>எண்குணத்து மறுவடிவே !<br>திருக்குமரன், திருமுருகன்<br>குகனென்று என்னுள்ளம்<br>உருகிடமெய் உணர்வறிய<br>வைப்பதும்நீ எப்போதோ? |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 16 | பேராசை எனும் பிணியில் பிணிபட்டு<br>ஓரா வினையேன் உழலத் தகுமோ?<br>வீரா, முது சூர் பட வேல் எறியும்<br>சூரா, சுர லோக துரந்தரனே. | வேலாலே எதிர்வந்த<br>சூராதி சூரர்களைத்<br>தூளாகச் செய்தவனே !<br>தேவர்குல காவலனே !<br>ஆராய்ந்து அறிகின்ற<br>திறனில்லா அடியேன்நான்<br>பேராசை பிணியாலே<br>கட்டுண்டு உழல்வேனோ? |
| 17 | யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்<br>தாமே பெற, வேலவர் தந்ததனால்<br>பூ மேல் மயல் போய் அறம் மெய்ப் புணர்வீர்<br>நாமேல் நடவீர், நடவீர் இனியே. | நாம்கற்ற கல்வியதும்<br>நாம்பெற்ற ஞானமதும்<br>தாம்திரும்பப் பெற்றிடவே<br>தந்தானே திருமுருகன் !<br>சீரான அறவழியில்<br>செல்கின்ற சீலோரே !<br>மாறாமல் அவன்பேரை<br>நாவாரப் பாடிடுவீர் ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 18 | உதியா, மரியா, உணரா, மறவா,<br>விதி மால் அறியா விமலன் புதல்வா,<br>அதிகா, அநகா, அபயா, அமரா<br>பதி காவல, சூர பயங் கரனே. | ஆதியிலா, அந்தமிலா<br>நினைவுமிலா, மறதி இலா<br>ஜோதியென ஆனவராம்<br>ஈசன்சிவன் திருக்குமரா !<br>பாவமிலா புண்ணியனே !<br>பயமிலாத தைரியனே !<br>தேவர்களின் காவலனே !<br>அசுரர்களின் பயங்கரனே ! |
| 19 | வடிவும் தனமும் மனமும் குணமும்<br>குடியும் குலமும் குடிபோ கியவா<br>அடி அந்தம் இலா அயில் வேல் அரசே<br>மிடி என்று ஒரு பாவி வெளிப்படினே. | முடிவுமிலா, முதலுமிலா<br>முடியரசே ! வேலவனே !<br>வடிவழகும், செல்வமதும்<br>நற்குணமும், நல்மனமும்<br>குலப்பெயரும், பெருமைகளும்<br>குடிப்பெயரும், எம்மைவிட்டு<br>விலகிடுதே வறுமைஎனும்<br>பாவிஅவன் வந்தவுடன் ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 20 | அரிதாகிய மெய்ப் பொருளுக்கு அடியேன்<br>உரிதா உபதேசம் உணர்த்தியவா<br>விரிதாரண, விக்ரம வேள், இமையோர்<br>புரிதாரக, நாக புரந்தரனே. | எப்போதும் தேவர்கள்<br>தியானிக்கும் ஓம்காரா !<br>ஒப்பில்லா வலியோனே !<br>எல்லார்க்கும் இனியோனே !<br>அடைதற்கு அரிதான<br>மெய்ப்பொருளை அடியேனும்<br>அடைதற்கு செய்தாயே !<br>என்சொல்வேன் உன்னருளை ! |
| 21 | கருதா மறவா நெறிகாண, எனக்கு<br>இருதாள் வனசம் தர என்று இசைவாய்<br>வரதா, முருகா, மயில் வாகனனே<br>விரதா, சுர சூர விபாடணனே. | அடியாரைக் காப்பதையே<br>விரதமெனக் கொண்டோனே !<br>கொடியோரை வென்றோனே !<br>கோலமயில் வாகனனே !<br>நினைவென்னும், மறப்பென்னும்<br>நிலைதாண்டி நானுணர<br>இணையடியாம் மலர்தரவே<br>இசைந்திடுவாய் எப்போது? |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 22 | காளைக் குமரேசன் எனக் கருதித்<br>தாளைப் பணியத் தவம் எய்தியவா<br>பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்<br>வேளைச் சுர பூபதி, மேருவையே. | நீள்கூந்தல் கொண்டவள்ளி<br>பதங்களினைப் பணிபவனை<br>வேலவனை, தேவலோகத்<br>தலைமகனை, மேருபோல<br>கம்பீரம் கொண்டவனை..<br>காளையனை, குமரனெனக்<br>கும்பிடநான் செய்ததவம்<br>என்னவென்று அறியேனே ! |
| 23 | அடியைக் குறியாது அறியா மையினால்<br>முடியக் கெடவோ? முறையோ? முறையோ?<br>வடி விக்ரம வேல் மகிபா, குறமின்<br>கொடியைப் புணரும் குண பூதரனே. | மின்னற்கொடி போன்றவளாம்<br>குறத்தியினை சேர்பவனே !<br>மின்னுகின்ற கூரியவேல்<br>ஏந்துகின்ற வேலவனே !<br>அறியாமை அதனாலே<br>உன்னடிகள் வணங்காது<br>அடியோடு அழிந்தேநான்<br>போவதவும் முறையாமோ? |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 24 | கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே<br>சேர்வேன், அருள் சேரவும் எண்ணுமதோ<br>சூர் வேரொடு குன்று தொளைத்த நெடும்<br>போர் வேல, புரந்தர பூபதியே. | சூரர்குலம் வேரறுத்து<br>கிரவுஞ்சமலை துளைத்தெடுத்த<br>வீரவேலைக் கொண்டவனே !<br>இந்த்ரலோக நாயகனே !<br>பெண்களோடு காமத்திலே<br>சேர்ந்திடவே மயங்கிடும்நான்<br>நின்னருளில் கலந்திடவே<br>நினைத்திடவும் தகுதியிலேன் ! |
| 25 | மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து<br>ஐயோ, அடியேன் அலையத் தகுமோ?<br>கையோ, அயிலோ, கழலோ முழுதும்<br>செய்யோய், மயில் ஏறிய சேவகனே. | செங்கரங்கள், செவ்வேலும்<br>செவ்வடிகள், மேனியெலாம்<br>செந்நிறமாய் ஆனவனே !<br>மயிலேறும் காவலனே !<br>வினைப்பயனால் வந்ததாம்இவ்<br>வாழ்வினையே நிலைத்ததென<br>நினைத்ததிலே களிப்புடனே<br>உழலுவதை என்சொல்வேன்? |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 26 | ஆதாரம் இலேன், அருளைப் பெறவே<br>நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே<br>வேதாகம ஞான விநோத, மன<br>அதீதா சுரலோக சிகாமணியே. | வேதமெலாம் சொல்லுகின்ற<br>மெய்ஞ்ஞானத் திருவடிவே!<br>தேவலோக அணிகலனே !<br>மனதிற்கெட்டா மாயவனே !<br>உந்தனருள் கிட்டும்வழி<br>உணர்ந்திடாது உழலுகின்ற<br>எந்தன்நிலை கண்டுநீயும்<br>இரங்காதல் நியாயமுமோ? |
| 27 | மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்<br>என்னே விதியின் பயன் இங்கு இதுவோ?<br>பொன்னே, மணியே, பொருளே, அருளே,<br>மன்னே, மயில் ஏறிய வானவனே. | தங்கம்போல ஒளிர்பவனே !<br>நவமணியே ! பரம்பொருளே !<br>எங்களருள் மன்னவனே !<br>மயிலிலேறும் மேலவனே !<br>மின்னல்போல தோன்றிஉடன்<br>மறைந்திடும் இவ்வாழ்க்கையினை<br>எந்நாளும் நிலைத்ததென<br>நினைத்திருத்தல் என்விதியோ? |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 28 | ஆனா அமுதே, அயில் வேல் அரசே,<br>ஞானாகரனே, நவிலத் தகுமோ?<br>யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்<br>தானாய் நிலை நின்றது தற்பரமே. | கேடில்லா அழிவில்லா<br>அமுதத்தை போன்றவனே!<br>ஈடில்லா வேல்கொண்ட<br>மன்னவனே ! ஞானியனே !<br>"நான்"என்னும் ஆணவத்தை<br>நீக்கிஎனை வேறில்லா<br>தானாய்நீ நிலைத்ததனை<br>சொல்லுவதும் இயன்றிடுமோ? |
| 29 | இல்லே எனும் மாயையில் இட்டனை நீ<br>பொல்லேன் அறியாமை பொறுத்திலையே<br>மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்<br>சொல்லே புனையும் சுடர் வேலவனே. | போர்புரியும் வலிமைமிகு<br>பன்னிரண்டு தோள்களிலும்<br>கோர்த்ததொரு மாலையென<br>என்பாடல் தரித்தவனே !<br>இல்வாழ்க்கை மாயையிலே<br>எனைமாட்டி வைத்தாயே !<br>பொல்லாத தீயவன்நான்<br>பிழைபொறுத்து அருள்வாயே ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 30 | செவ்வான் உருவில் திகழ் வேலவன், அன்று<br>ஒவ்வாதது என உணர்வித் ததுதான்<br>அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்<br>எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே. | செவ்வான நிறத்தோனே !<br>செவ்வேலா ! அந்நாளில்<br>அவ்வாறு குருவாகி<br>நீசெய்த உபதேசம்<br>வெவ்வேறாய் உள்ளோடு<br>அளித்திட்ட உணர்வதனை<br>எவ்வாறாய் மற்றோர்க்கு<br>எடுத்துரைப்பேன் ? இயலாதே ! |
| 31 | பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே<br>வீழ்வாய் என என்னை விதித்தனையே<br>தாழ்வானவை செய்தன தாம் உளவோ?<br>வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே. | பாழான இவ்வுகலக<br>வாழ்க்கையெனும் மாயையிலே<br>வீழ்ந்திடவே எனைநீயும்<br>விதித்ததுஏன்? சொல்வாயோ !<br>தாழ்வான செயலேதும்<br>செய்தேனோ முன்பேநான் ?<br>வாழ்வாய்நீ வேலவனே !<br>மயிலேறும் சண்முகனே ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 32 | கலையே பதறிக், கதறித் தலையூடு<br>அலையே படுமாறு, அதுவாய் விடவோ?<br>கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்<br>மலையே, மலை கூறிடு வாகையனே | கொலைசெயும் தொழில்கொண்ட<br>வேடர்குலம் வந்தவளை<br>மலைபோன்ற தோள்களினால்<br>அணைக்கின்ற வேலவனே !<br>சத்தமுடன் சாத்திரங்கள்<br>பேசிபல வாதம்செயும்<br>மொத்தமான மாயையிலே<br>மூழ்கியேநான் போவேனோ? |
| 33 | சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும்<br>விந்தாடவி என்று விடப் பெறுவேன்<br>மந்தாகினி தந்த வரோதயனே<br>கந்தா, முருகா, கருணாகரனே. | கங்கைநதி தாங்கிவந்து<br>தேவர்வந்து தந்ததினால்<br>கந்தனென வந்தவனே !<br>கருணைமிகு காவலனே !<br>சஞ்சலத்தில் சஞ்சரிக்கும்<br>சம்சார வாழ்க்கையிலே<br>விந்தயமலை காடுபோன்ற<br>இன்னலென்று விடுப்பேனோ? |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 34 | சிங்கார மடந்தையர் தீநெறி போய்<br>மங்காமல் எனக்கு வரம் தருவாய்<br>சங்க்ராம சிகாவல, சண்முகனே<br>கங்காநதி பால, க்ருபாகரனே. | கங்கையவள் திருமகனே !<br>கருணைமிகு சண்முகனே !<br>சங்க்ராம மயிலதனை<br>வாகனமாய் கொண்டவனே !<br>சிங்கார மங்கையரின்<br>தீயவழி சங்கமத்தால்<br>மங்கிநானும் போகாத<br>வரமெனக்கு அருள்வாயா? |
| 35 | விதிகாணும் உடம்பை விடா வினையேன்<br>கதிகாண மலர்க் கழல் என்று அருள்வாய்?<br>மதி வாள்நுதல் வள்ளியை அல்லது பின்<br>துதியா விரதா, சுர பூபதியே. | பிறைநிலவை போல்வளைந்த<br>நெற்றிகொண்ட வள்ளியன்றி<br>பிறரையாரும் வணங்கிடாத<br>விரதம்கொண்ட வேலவனே !<br>மறுபடியும் மறுபடியும்<br>பிறக்கும்வினை நீக்கினனை<br>திருவடிகள் தருவதனால்<br>நற்கதியை அருள்வாயோ? |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 36 | நாதா, குமரா நம என்று அரனார்<br>ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்?<br>வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்<br>பாதா குறமின் பத சேகரனே. | வேதம்சொல்லும் தேவர்களும்<br>சூடுகின்ற மலரினைப்போல்<br>பாதங்களைக் கொண்டவனே !<br>வள்ளிபதம் பணிபவனே !<br>போற்றிஉனை வணங்கிஅந்த<br>பரமனவன் கேட்டதற்கு<br>ஏற்றுநீயும் சொன்னபொருள்<br>என்னவென்று சொல்வாயோ? |
| 37 | கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்<br>பரிவாரம் எனும் பதம் மேவலையே<br>புரிவாய் மனனே பொறையாம் அறிவால்<br>அரிவாய் அடியோடும் அகந்தையையே. | வேலெடுத்து கிரவுஞ்சமலை<br>பிளந்தெடுத்த முருகனவன்<br>தாள்பணியும் தொண்டனெனும்<br>பதவிவேண்டு என்மனமே !<br>"நான்எனது" என்னுமொரு<br>ஆணவத்தை பொறுமையெனும்<br>ஞானத்தினால் அடியினோடு<br>நீக்கிடுவாய் என்மனமே ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 38 | ஆதாளியை, ஒன்று அறியேனை அறத்<br>தீது ஆளியை ஆண்டது செப்புமதோ<br>கூதாள கிராத குலிக்கு இறைவா<br>வேதாள கணம் புகழ் வேலவனே. | கூதாளம் என்னும்மலர்<br>மாலையினை தரித்தவனே !<br>வேதாள கூட்டம்புகழ்<br>வேலவனே ! வள்ளிபதி !<br>தீதான குற்றம்செய்து<br>வீம்புபேசும் தீயனெனை<br>தோதாகத் தேர்ந்ததென்ன<br>தேவனுந்தன் கருணையதே ! |
| 39 | மாஏழ் சனனம் கெட மாயைவிடா<br>மூஏடணை என்று முடிந்திடுமோ<br>கோவே, குறமின் கொடிதோள் புணரும்<br>தேவே சிவ சங்கர தேசிகனே. | மின்னல்கொடி போன்றவளாம்<br>வள்ளியினை அணைப்பவனே !<br>அண்ணல்சிவ நாதனுக்கே<br>குருவுமான இறையவனே !<br>ஏழுவகை பிறப்புடனே<br>மூன்றுவகை ஆசைகளும்<br>வீழ்தென்னை பற்றிடாமல்<br>விடுவதுவும் எப்பொழுதோ? |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 40 | வினை ஓட விடும் கதிர் வேல் மறவேன்<br>மனையோடு தியங்கி மயங்கிடவோ?<br>சுனையோடு, அருவித் துறையோடு, பசுந்<br>தினையோடு, இதணோடு திரிந்தவனே. | வள்ளிமீது காதலினால்<br>அருவி,சுனை,தினைவயலில்<br>வள்ளிமலை சாரலிலே<br>வளையவளைய வந்தவனே !<br>வினைஇரண்டும் ஒழிக்கும்பெரு<br>ஆற்றல்கொண்ட வேல்மறவா<br>எனைநீயும் புவிவாழ்வில்<br>மயங்கவைத்தல் தான்தகுமோ? |
| 41 | சாகாது, எனையே சரணங் களிலே<br>கா கா, நமனார் கலகம் செயும் நாள்<br>வாகா, முருகா, மயில் வாகனனே<br>யோகா, சிவ ஞான உபதேசிகனே. | ஞானம்சொன்ன குருபரனே !<br>மயிலிலேறும் அழகனே !<br>யோகத்திலும் சிறந்தவனே !<br>திருமுருகன் ஆனவனே !<br>காலன்வந்து என்னுயிரை<br>கொண்டுசெல்ல முயலும்போது<br>வேலன்வந்து காத்துஎனை<br>பாதம்சேர்த்து அருளவேண்டும் ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 42 | குறியைக் குறியாது குறித்து அறியும்<br>நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்<br>செறிவு அற்று, உலகோடு உரை சிந்தையும் அற்று<br>அறிவு அற்று, அறியாமையும் அற்றதுவே. | குறிக்கோளாம் செம்பொருளை<br>சொல்லாமல் சொல்லிஅதை<br>அறிகின்ற வழியினையும்<br>வேலனவன் சொன்னதனால்<br>உலகத்தோர் பற்றறுந்து<br>உலகவியல் அறிவறுந்து<br>விலகினேனென் அறியாமை<br>முற்றிலும் விலகியதால்.. |
| 43 | தூசா மணியும் துகிலும் புனைவாள்<br>நேசா முருகா நினது அன்பு அருளால்<br>ஆசா நிகளம் துகளாயின பின்<br>பேசா அநுபூதி பிறந்ததுவே. | மணிமாலை அதனோடு<br>தூய்மைமிகு ஆடைகளும்<br>அணிகின்ற வள்ளியவள்<br>காதலனே ! திருக்குமரா !<br>ஞானியேஉன் கருணையினால்<br>ஆசைத்தடை உடைபடவே<br>மோனநிலை நானடைந்தேன்<br>அநுபூதி எனக்கிதுவே ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 44 | சாடும் தனிவேல் முருகன் சரணம்<br>சூடும் படி தந்தது சொல்லு மதோ?<br>வீடும், சுரர் மாமுடி, வேதமும், வெம்<br>காடும், புனமும் கமழும் கழலே. | வேதமவை நான்கினுலும்<br>வெப்பமிகு காட்டினிலும்<br>தேவர்சிர மகுடத்திலும்<br>பட்ட இடம் யாவிலுமே<br>நறுமணத்தை சேர்த்ததுவாம்<br>வேலவனின் திருவடிகள்<br>கருணையினால் என்சிரமும்<br>சூடியதே ! பாக்கியமே ! |
| 45 | கரவாகிய கல்வி உளார் கடை சென்று<br>இரவா வகை மெய்ப் பொருள் ஈகுவையோ?<br>குரவா, குமரா, குலிசாயுத, குஞ்<br>சரவா, சிவயோக தயாபரனே. | தெய்வயானை நாயகனே !<br>திருக்குமரா ! சத்குருவே!<br>மெய்யான அன்பர்க்கெலாம்<br>சிவயோகம் அளிப்பவனே !<br>கற்றவர்போல் நடிக்கும்சில<br>குருவிடம்நான் கெஞ்சிடாமல்<br>உத்தமன்நீ மெய்ப்பொருளை<br>உன்வழியாய் காட்டிடுவாய் ! |

PSDPRASAD

| | | |
|---|---|---|
| 46 | எம் தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ<br>சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்<br>48கந்தா, கதிர் வேலவனே, உமையாள்<br>மைந்தா, குமரா, மறை நாயகனே. | கூரியவேல் கொண்டவனே !<br>கந்தசாமி ஆனவனே!<br>பார்வதியின் பாலகனே !<br>மறைகளதன் நாயகனே !<br>தாயுமாகி, எந்தனுக்கு<br>தந்தையாவும் ஆகினாய்!<br>மாய்த்திடுவாய் மனக்கவலை !<br>காத்துஎனை ஆட்கொண்டே ! |
| 47 | ஆறு ஆறையும் நீத்து அதன் மேல் நிலையைப்<br>பேறா அடியேன், பெறுமாறு உளதோ?<br>சீறாவரு சூர் சிதைவித்து, இமையோர்<br>கூறா உலகம் குளிர்வித்தவனே. | கோபம்கொண்டு வந்தவனாம்<br>சூரனையே அழித்ததனால்<br>தேவர்குலம் இன்புறவேச்<br>செய்தசிவ பாலகனே !<br>முப்பத்தாறு தத்துவங்கள்<br>தாண்டிஅதன் மேல்நிலையை<br>எப்படிநான் பெற்றிடவேன்<br>என்னும்வழி சொல்லிடுவாய் ! |

PSDPRA

| | | |
|---|---|---|
| 48 | அறிவு ஒன்று அற நின்று, அறிவார் அறிவில்<br>பிறிவு ஒன்று அற நின்ற, பிரான் அலையோ?<br>செறிவு ஒன்று அற வந்து, இருளே சிதைய<br>வெறி வென்றவரோடு உறும் வேலவனே. | மெய்ஞ்ஞான நிலையிருக்கும்<br>ஞானியரின் அறிவினில்<br>மெய்ப்பொருளாய் நின்றவனே !<br>முருகனான கடவுளே !<br>பாவமலம் அகன்றவராம் !<br>ஆசைகளை வென்றவராம் !<br>ஜீவன்முத்த ரோடுசேர்ந்து<br>ஒன்றிணையும் வேலனே ! |
| 49 | தன்னந் தனி நின்றது, தான் அறிய<br>இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ?<br>மின்னும் கதிர் வேல் விகிர்தா, நினைவார்<br>கின்னம் களையும் க்ருபை சூழ் சுடரே. | நினைத்தவரின் துன்பங்களை<br>தீர்த்துவைக்கும் கருணையோனே !<br>நினைத்தபடி உருவெடுக்கும்<br>திறன்படைத்த வேலவனே !<br>எந்தனைநீ ஆட்கொள்ள<br>தனிநிலையில் நான்கொண்ட<br>அந்தநொடி அனுபவங்கள்<br>வார்த்தையிலே சொல்லவரா ! |

| | | |
|---|---|---|
| 50 | மதிகெட்டு அறவாடி, மயங்கி, அறக்<br>கதிகெட்டு, அவமே கெடவோ கடவேன்?<br>நதி புத்திர, ஞான சுகாதிப, அத்<br>திதி புத்திரர் வீறு அடு சேவகனே. | கங்கைநதி மைந்தனே !<br>இன்பம்தரும் தலைவனே !<br>பங்கம்செய்து அசுரரின்<br>வலிமைஅழித்த வீரனே !<br>அறிவுகெட்டு, வாட்டமுற்று<br>மயக்கமுற்று, இனியும்நான்<br>அறவழியாம் அதில்தவறி<br>கெட்டொழிந்து சென்றிடேன் ! |
| 51 | உருவாய் அருவாய், உளதாய் இலதாய்<br>மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்<br>கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்<br>குருவாய் வருவாய், அருள்வாய் குகனே. | அறுமுகத்து உருவமாகி<br>வடிவிலாத அருவமாகி<br>நறுமணத்து மலருமாகி<br>உள்ளதாகி, இலாததாகி<br>கருவுமாகி, உயிருமாகி<br>கதியுமான கந்தனே !<br>குருவுமாகி என்னைவந்து<br>ஆண்டகுக நாதனே ! |

PSDPRA